## அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
### பிறப்பிப்பவர்:திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,

ந.க.எண்.781/2019/ஊ.வ2 நாள். 28.02.2019

பொருள்: நேரடி நியமனம் –தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு IV தட்டச்சர் பணியிடங்கள் – தேர்வு செய்து பெயர் பட்டியல் அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு வரப்பெற்றது – பணி நியமனம் வழங்கி ஆணையிடுதல்.

பார்வை: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதம் எண்.1662/PSD-A/2019, நாள். 20.02.2019.

***

ஆணை:

நேரடி நியமனம் –தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு IV தட்டச்சர் பணியிடங்கள் – தேர்வு செய்து பெயர் பட்டியல் அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு வரப்பெற்ற பெயர் பட்டியலில் இடம்பெற்ற கீழ்க்காணும் நபர்களுக்கு அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டவாறு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (Tamilnadu Government Servants (Conditions of service) act 2016 விதி 17(1)–ல் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்க முற்றிலும் தற்காலிகமாக தட்டச்சர் ஆக பணிநியமனம் மற்றும் பணியிடம் வழங்கி இதன்வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பதிவு எண் / பெயர் / முகவரி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்படும் பதவி / அலுவலகம் |
|---|---|---|
| 1 | REGISTER NO. 250614073<br>மணிகண்டன்.N,<br>C/o.V.நீலமேகம்,<br>1/56, அந்தநல்லூர் அஞ்சல்,<br>ஸ்ரீரங்கம் வட்டம்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 639 101 | தட்டச்சர்,<br>மாவட்ட ஆட்சியரகம்<br>(வளர்ச்சி பிரிவு) அலுவலகம்.<br>அரியலூர்.<br>(காலிப்பணியிடத்தில்) |
| 2 | REGISTER NO. 200528283<br>செல்வசக்தி.K<br>2AJ6/31 CMS நகர்,<br>கம்பம்,<br>உத்தமபாளையம் தாலுக்கா,<br>தேனி மாவட்டம் - 625 516 | தட்டச்சர்,<br>உதவி இயக்குநர்<br>(ஊராட்சிகள்/தணிக்கை) அலுவலகம்,<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>அரியலூர்.<br>(காலிப்பணியிடத்தில்) |

தொடர்ச்சி.



Scanned with OKEN Scanner

| வ. எண் | பதிவு எண் / பெயர் / முகவரி (திருவாளர்கள்) | பணி நியமனம் செய்யப்படும் பதவி / அலுவலகம் |
|---|---|---|
| 1 | REGISTER NO. 220108001<br>கணேஷ்.S<br>மேட்டுத்தெரு,<br>தடாகம் கிராமம், செஞ்சி தாலுக்கா,<br>விழுப்புரம் மாவட்டம் 604 152. | தட்டச்சர்,<br>ஊராட்சி ஒன்றிய அலுவலகம்.<br>அரியலூர்<br>(காலிப்பணியிடத்தில்) |

## நிபந்தனைகள்

1. இப்பணிநியமனத்தின் பொருட்டு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையாக உள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு இப்பணிநியமனம் உட்பட்டதாகும்.
2. இந்நியமனத்தின் பொருட்டு இவரால் விண்ணப்பிக்கப்படும் போது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் தவறானவை என பின்னர் தெரியவரின்,இவரின் தற்காலிக தெரிவும், தற்காலிக பணி நியமனமும் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.
3. தட்டச்சர் நிலை பதவிக்கு அரசாணை (நிலை) எண். 303 நிதித் (ஊதியப்பிரிவு)துறை நாள்– 11.10.2017–ன்படி அட்டவணை 3–ல் தட்டச்சர் நிலை பதவிக்கு ரூ. 19500–62000/– என்ற ஊதிய நிலையில் ஊதியம் மற்றும் இதரப்படிகள் வழங்கப்படும்.
4. பணியில் சேர்ந்த நாள் முதல் இவரது தகுதிகாண் பருவம் துவங்கும், தகுதிகாண் பருவம் இரண்டாண்டு காலமாகும். பணியில் சேர்ந்து தொடர்ச்சியான 3 வருடங்களுக்குள் இத்தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திட வேண்டும்.
5. தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பணி நிபந்தனைகள் சட்டம் 2016 (Tamilnadu Government Servants (Conditions of service) act 2016 விதி 20(5) இல் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளுக்கிணங்க, பணியில் சேரும் போதுஉதவி சிவில் சர்ஜன் (Assistant Civil Surgeon) / மருத்துவ அலுவலர் பதவிக்கு குறையாத மருத்துவரிடம் (உடல் ஊனமுற்றவராயிருப்பின் மருத்துவக் குழுவிடமிருந்து) பெற்ற உடல் தகுதிச்சான்று மற்றும் கல்விச்சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களை காண்பித்து பணியில் சேர வேண்டும்.
6. அரசாணை (நிலை) எண். 33 பணியாளர் மற்றும் நிர்வாகச் (M) சீர்திருத்தத்துறை நாள்– 02.03.2017–ன்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் பின்வரும் 4 துறைத் தேர்வுகள் மற்றும் **Computer on Office Automation** தேர்விலும் தகுதிகாண்பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெற்றிடவேண்டும்.

    1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் – 1994 & விதிகள் மற்றும் இந்திய அரசிலமைப்பு சட்டம் ( தேர்வு குறியீட்டு எண். 008)
    2. ஊரக வளர்ச்சி துறை கணக்குகள் ( தேர்வு குறியீட்டு எண். 166) .
    3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை திட்ட நிர்வாகம் ( தேர்வு குறியீட்டு எண். 010)
    4. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல். ( தேர்வு குறியீட்டு எண். 172).

7. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மேற்காணும் துறைத்தேர்வுகளில் முழுமையாக தேர்ச்சி பெறவில்லையெனில், அரசு நெறிமுறைகளின்படி பணியிலிருந்து நீக்கம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
8. இந்நியமனதாரர்கள் பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் (Contributory Pension Scheme)கொண்டுவரப்படுகிறார்கள்.

தொடர்ச்சி..

Scanned with OKEN Scanner

9. தொடர்புடைய வேலைவாய்ப்பகத்திற்கு பதிவு அட்டையினை அனுப்பு வைக்கும் பொருட்டு தமது பதிவு அட்டையினை இவ்வலுவலகத்தில் ஒப்படைத்திட இந்நியமனதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. இந்நியமன ஆணை கிடைக்கப்பெற்ற 2 தினங்களுக்குள் பணியில் சேர வேண்டும். பணியில் சேர பணியேற்பிடைக் காலமோ அல்லது கால நீட்டிப்போ அல்லது எவ்வித கோரிக்கையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குறிப்பிட்ட காலத்திற்குள் பணியில் சேரவில்லையெனில், தேர்வு பட்டியலிலிருந்து இவரின் பெயரை நீக்கம் செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

தனியர்களது பணிசேர் அறிக்கையினை தொடர்புடைய அலுவலகத் தலைமைகள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியருக்காக,
அரியலூர்.

பெறுநர்:
தொடர்புடைய நபர்கள் – (பதிவஞ்சல் வழியாக)

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், அரியலூர்.
நகல்: மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), அரியலூர்.
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள் /தணிக்கை), அரியலூர்.
நகல்: திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அரியலூர்.
நகல்: செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3,
நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
நகல்: ஊ.வ.2 இருப்புக் கோப்புக்கு.

Scanned with OKEN Scanner